20th March 1959]

* 916-C *Q.*—Sri M. P. SARATHI : கனம் முதல் அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் பற்றி மத்திய அரசாங்கத்திடமிருந்து ஏதாவது தகவல் வந்துள்ளதா ?

(ஆ) அதுபற்றி அரசாங்கம் என்ன பதில் அனுப்பியுள்ளது ?

(இ) இந்த சபையைக் கலந்து முடிவுகள் செய்யப்படுமா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : (*a*) & (*b*) Attention of the Hon'ble Member is invited to the detailed answer given in reply to starred question No. 916-A by Sri N. K. Palaniswami.

(*c*) Yes, Sir.

Sri N. K. PALANISAMI : மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் போடுவதற்கு முன்பு, ஏற்கனவே போடப்பட்டிருக்கும் இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களினால் எந்த அளவிற்கு தொழில் வாய்ப்புகளும், பொருளாதார முன்னேற்றமும் நம் தேசத்தில் உண்டாகியிருக்கிறது என்று பரிசிலனை செய்யப்பட்டதா ? அல்லது, அப்படி பரிசீலனை செய்ததற்குப் பிறகு இதை ஆரம்பிப்பதற்கு திட்டமிடுவார்களா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : அதையும் பரிசீலனை செய்து தான், அந்த அடிப்படையில் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் என்னென்ன நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று முடிவு செய்யவேண்டும்.

Sri S. M. ANNAMALAI : மேஜை மீது வைக்கப்பட்டிருக்கிற அறிக்கையில் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் விரிவான நகல் இரண்டு ஆண்டுகளுக்குப் பின்தான் வரும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இரண்டு வருடங்கள் என்பது இரண்டாவது ஐந்தாண்டுத்திட்டம் முடிவடையும் தருவாயில் இருக்கும். அப்படி விரிவான அறிக்கை கிடைக்க காலதாமதமாவதால் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தை ஒத்திப் போடும் நிலைமையிருக்கிறதா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : இதனால் ஒத்திப்போட வேண்டிய அவசியமில்லை. பூராவும் உருவாக்குவதில் சிறிது காலமாகும். அதனால் ஒத்திப் போடவேண்டியதில்லை.

Sri V. K. KOTHANDARAMAN : நமது ராஜ்யத்தைப் பொறுத்த மட்டில் எந்தெந்த அம்சங்களை மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் எடுத்துக்கொள்ளவேண்டுமென்று ஏதாவது ஆலோசனை ப்ளானிங் கமிஷனுக்கு அனுப்பப்பட்டிருக்கிறதா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : இன்னும், யோசனை ஒன்றும் அனுப்பப்படவில்லை. எல்லாத் துறைகளிலும் முன்னேறவேண்டியிருக்கிறது. ஒரு சில துறைகளுக்கு மட்டும் அனுப்பவேண்டுமென்றில்லை.

Sri A. A. RASHEED : Sir, may I know what will be the approximate estimated expenditure for the Third Five-Year Plan for our State?

The Hon. Sri C. SUBRAMANIAM : It is too early to venture a guess.

Sri K. RAMACHANDRAN : மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நமது மாகாணத்தைப் பொறுத்த மட்டில் போடவேண்டிய திட்டங்களைப் பொறுத்த வரையில் இந்த சபையில் அது விவாதத்திற்கு எப்பொழுது வரும் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : பூர்வாங்க திட்டம் முடிவானவுடன் அந்தத் திட்டம் இந்த சபையின் முன் விவாதத்திற்கு வைக்கப்படும்.

SRI K. B. S. MANI : மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டம் துவங்குவதற்கு எஸ்டிமேட் போடுவதற்கு முன்னர் முதல் இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களில் எந்த அளவிற்கு நமது ராஜ்யம் முன்னேறியிருக்கிறது என்று சர்வே செய்து அந்த கணக்கை வைத்து மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டம் வரையறுக்கப்படுமா ?

MR. SPEAKER : அதற்கு பதில் சொல்லியாகிவிட்டதே.

SRI A. GOVINDASAMY : மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டம் தயார் செய்கிற நேரத்தில் மற்ற எதிர்க்கட்சிகளையும் கலந்து கொண்டு திட்டம் திட்டுவதாக அமைச்சர் அவர்கள் இந்த அவையில் உத்தரவாதம் அளித்தார்கள். எப்பொழுது எல்லாக் கட்சித் தலைவர்களையும் கூட்டி திட்டம் திட்ட உத்தேசித்திருக்கிறார்கள் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : சமயம் வரும்போது.

SRI N. K. PALANISAMI : மத்திய சர்க்காரால் ஏற்படுத்தப்பட்டிருக்கிற க்ரூப்கள் மாதிரி இங்கேயும் ஏற்பாடு செய்யப்பட்டு, இரிகேஷன், பவர் போன்றவைகளை பரிசீலனை செய்து முடிவெடுக்க க்ரூப் ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. அப்படியானால் அந்தக் க்ரூப்கள் யார் யாரைக் கொண்டதாகயிருக்கும், என்னென்ன விஷயங்களை அது பரிசீலிக்கும் என்றும் அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : இப்பொழுது அதிகாரிகளைக் கொண்டதாக வைத்து பூர்வாங்க பரிசீலனை நடக்கிறது. அதற்குப் பிற்பாடு எப்படி ஏற்பாடு செய்யவேண்டுமென்று யோசனை செய்து முடிவு செய்யவேண்டியிருக்கிறது.

SRI K. ANBAZHAGAN : மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்தைப் பற்றி ஆலோசிக்கிறபோது மாகாண அடிப்படையில் நாம் வேண்டுகோள்களை எடுத்துச் சொல்வதோடு மட்டுமல்லாமல் வட்டார வளர்ச்சி அடிப்படையில் வைத்து, ரீஜனல் டெவலெப்மெண்டை அடிப்படையாக வைத்து தென் மாநிலங்கள் எல்லாம் சேர்ந்து தங்கள் குறைகளை வலியுறுத்த அமைச்சர் அவர்கள் ஏதாவது திட்டமிடுவார்களா?

THE HON. SRI C. SUBRAMANIAM : இப்பொழுது " ஸோன் " அடிப்படையில் இந்தத் திட்டங்களை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று யோசனை சொல்லப்பட்டிருக்கிறது. அந்தக் கருத்து பொதுவாக ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது. எந்த முறையில் அமுல் நடத்த வேண்டுமென்று ஆலோசனை செய்து முடிவு செய்ய வேண்டியிருக்கிறது.

SRI M. P. SARATHI : இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு மத்திய அரசாங்கத்தினிடமிருந்து அதிகமாக பணம் கேட்டு அதில் ஏமாந்ததைப் போன்று மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டம் தயாரிக்கும்போது கொஞ்சம் உஷாராயிருந்து அதிகப் பணம் கேட்பார்களா என கேட்க விரும்புகிறேன்.

THR HOE. SRI C. SUBRAMANIAM: சில சமயங்களில் கூட ஏமாற்றமே வரக்கூடாது என்றிருந்தால் அதிகமாக கேட்கவே கூடாது. நாட்டில் இருக்கக்கூடிய பல்வேறு சூழ்நிலைகளைப் பொறுத்திருக்கிறது நமக்கு பணம் கிடைப்பது. எல்லா ராஜ்யங்களையும் அடிப்படையாக வைத்துத் தான் முடிவு செய்யவேணடும்.

SRI A. GOVINDASAMY : இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் போதுமான பணம் கிடைக்காததால் சில திட்டங்கள் கைவிடப்பட்டது. அந்தத் திட்டங்கள் மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்தில் முதல் இடம் பெறுமா ?

20th March 1959]

The Hon. Sri C. SUBRAMANIAM : அந்த திட்டங்கள் முதல் இடம் பெறக் கூடிய தகுதியிருந்தால் முதல் இடம் பெறும். அதை விட முக்கியமான திட்டங்கள் வந்தால் அவைகளுக்கு முதல் இடம் கொடுக்கப் படும்.

Seed Farms

* 916-D *Q.*—Sri V. K. KOTHANDARAMAN (on behalf of Sri N. Marudachalam) : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether there is any proposal to purchase a site in Perur village, Coimbatore, for opening a Seed Farm;

(*b*) whether there was any sudden change in selecting the place; and

(*c*) if so, the reasons therefor?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) No, Sir.

(*b*) No, Sir.

(*c*) Does not arise.

Selection of students for admission to aided teachers' training schools

* 916-E *Q.*—Sri A. VEDARATHNAM (on behalf of Sri N. R. Thiagarajan) : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

தனி நபர்கள் மானேஜ்மெண்டிலுள்ள ஆசிரியர் பயிற்சிப் பள்ளிக்கும் சர்க்காரால் நியமிக்கப்பட்ட கமிட்டியினரால் மாணவர்களைத் தேர்ந்தெடுக்க உத்திரவிட உத்தேசம் உண்டா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : The proposal will be considered and a decision taken before the beginning of the next academic year.

Sri A. VEDARATHNAM : சில மதஸ்தாபனங்கள் நடத்துகிற இந்த பயிற்சி பள்ளிகளில் அந்த மதத்தினருக்கே முழுச் சலுகை கொடுக்கப் படுகிறது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? பிற மதத்தினர் அதில் இடம் பெற விரும்பினால் அதன் மூலம் அவர்கள் மத மாற்றத்திற்கு தூண்டப் படுவது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? இதைத் தவிர்க்க அரசாங்கம் என்ன முயற்சி எடுத்துக்கொள்ளும் ?

The Hon. Sri C. SUBRAMANIAM : சில ஸ்தாபனங்கள் இது மாதிரி ஒரு மதத்தினருக்கு மட்டும் தனி சலுகை கொடுக்கிறது என்று சில புகாரர்கள் வந்திருக்கின்றன. ஆனால் மத மாற்றம் ஏற்படுகிறது என்ற புகார் வரவில்லை. இதையெல்லாம் அனுசரித்து இதற்கு என்ன செய்வது, தனிப்பட்டவர்கள் பள்ளிகளுக்கும் ஒரு கமிட்டி போடுவது அவசியமா என்பதைப்பற்றி இப்பொழுது யோசித்துகொண்டு வருகிறோம்.

Sri A. GOVINDASAMY : இம்மாதிரி பயிற்சிப் பள்ளிகளில் வருகிற மாணவர்களைத் தேர்ந்தெடுக்கக் கூடியவர்கள், கதர் அணிந்து கொண்டு வருகிறவர்களாக இருந்தால் கதர் போட்டு வரும் மாணவர் களுக்கு விசேஷ சலுகை கொடுக்கப்பட்டு வருகிறது என்பது சர்க்காருக்குத் தெரியுமா ? இதைத் தவிர்க்க என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.